[27th September 1958

Water scarcity in Periyakulam taluk

*554 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுகா, கண்டமராக்கனூர் ஜமீன், ஓடைப்பட்டி, சீப்பாலக்கோட்டை, ஜங்காலபட்டி, தாழச்சேரி, கொடுவிளைப் பட்டி ஆகிய ரெவின்யு கிராமங்களில் தண்ணீர் கஷ்டம் நீங்க சர்க்கார் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Proposals for the deppening of wells in Seepalakottai, Thadicheri and Jangalpatti have been taken up. Construction of an overhead tank at Koduvilaipatti has been sanctioned. Wells have been constructed for Gandamanickanur and Odaipatti.

SRI N. R. THIAGARAJAN : இந்த ராஜ்யத்திலே இந்தப் பகுதியிலே, எங்கும் இல்லாத வகையில், 120 அடிக்குக் கீழே நீர்மட்டம் போய் விட்டது. பதிலிலே கூறப்பட்ட இரண்டு, மூன்று கிராமங்களைத் தவிர, 10, 15 கிராமங்களிலே குடி தண்ணீருக்காக மக்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். பொதுவாக, இந்தப் பிராந்தியத்திற்கு ஒரு திட்டம் போட முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜில்லாவில் நடந்த பிளானிங் கமிட்டி கூட்டத்திலே வைகையாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து இந்த மாதிரி கிராமங்களுக்கு கொடுப்பது சாத்தியமா என்று பரிசீலனை செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI N. MAHALINGAM : In view of the fact that under the National Rural Water-supply Scheme, 1·4 crores of rupees have been allotted to our State and that the money is not being spent because only four districts are permitted to spend that amount, will the Government represent to the Central Government to extend the National Rural Water-supply Scheme to the whole State?

MR. SPEAKER : The hon. Member must put a separate question. However, if the Hon. Minister is going to reply, I have no objection.

THE HON. SRI M. A. MANICKAVELU : It was not only represented to the Government of India but it was pressed very hard also. But still, the Centre does not agree to it.

SRI A. GOVINDASAMY : இந்தத் தண்ணீர் இல்லாத பகுதிகளுக்கு வைகையிலிருந்து தண்ணீர் கொடுக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வைகையிலிருந்து இந்தப் பகுதிக்கு எந்த முறையில் தண்ணீர் கொண்டு வருவதாக அரசாங்கம் முயற்சிக்கப் போகிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும் என்பதுதான் இப்பொழுதுள்ள யோசனை.

Location of all Government Offices in the Fort St. George

*555 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நகரின் பல இடங்களிலும் உள்ள சென்னை சர்க்கார் காரியாலயங்களை கோட்டையிலேயே வைத்துக்கொள்ள உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

27th September 1958]

SRI S. M. ANNAMALAI : சென்னையிலுள்ள இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் பண்ட்ஸ் ஆபீசுக்கு உள்ளே சென்றால், "பிளாக் ஹோல் ஆப் கல்கத்தா" மாதிரியிருக்கிறது. அதை மாற்றியமைக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

MR. SPEAKER : தனிக்கேள்வி போடவேண்டும்.

Supply of electricity to Kongarayanallur

* 556 Q.—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957-ம் ஆகஸ்ட் 10உ கனம் பொது மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் நன்னிலம் தாலூகாவில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது நன்னிலம் தாலூகா, நெ. 42, கொங்கராயநல்லூர் ஹரிஜன வாசிகளால் மேற்படி ஹரிஜன தெருவிற்கு மின்சாரம் விஸ்தரிக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்ட மனுவின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) எப்போது மேற்படி வேலே முடிவு பெறும் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The petition referred to has not been received by the Government. The electrical licensee having jurisdiction over the area, has, however, stated that he has not so far received any requisition for extension of electricity for street lights in the Harijan colonies either from the panchayat or from the residents of the locality. However, he would examine the position, if specific requisitions with details of requirements are received.

(b) & (c) Do not arise.

SRI M. C. MUTHUKUMARASWAMY : அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்பொழுது, நானே அந்த மனுவை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். வரவில்லே என்று சொல்லுகிறார்கள். இனியாவது அதன்மீது தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : இன்னொரு மனு கொடுத்தால் நல்லது.

SRI K. B. S. MANI : இப்பொழுது ஹரிஜன காலனிகளுக்கு இலவசமாக மின்சார வசதி கொடுப்பதற்காக டைரக்டரால் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் 10,000 ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு ஜில்லா ஹரிஜன பொதுநல அதிகாரியின் சிபார்சின் பேரில், அவர் சிபார்சு செய்கிற கிராமங்களுக்கு மின்சார சப்ளே கொடுப்பதற்கு முன் வருவார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : ஹரிஜனச் சேரிகளுக்கு மின்சார சப்ளேயைப் பொறுத்தவரையில், சமீப காலத்தில் ஹரிஜன இலாக்காவும், மின்சார இலாக்காவும் ஒன்றாகக் கூடி, எல்லாப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும் கொடுக்கிற நேரத்திலே, அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய சேரிகளுக்கும் கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. பல வருடங்களுக்கு முன்னதாகவே விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளில் ஹரிஜன இலாக்கா இரண்டு லட்சம் ரூபாய் வருஷத்திற்குக் கொடுத்து, அந்த விஸ்தரிப்புக்கு இந்தத் தொகையைக் கொண்டு உதவி செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எவ்வெப்பொழுது எந்தெந்தப் பகுதியிலிருந்து கோரிக்கை வருகிறதோ, அதைப் பரிசீலனை செய்து, இந்தப் பணத்தைக் கொண்டு அந்தப் பகுதிகளுக்கு விஸ்தரிப்புச் செய்து கொடுத்து வருகிறோம்.